| | |
|---|---|
| மையம் : ______________ <br><br> மேற்பார்வையாளர் <br> கையொப்பம்: ______________ | பெயர்: ______________ <br><br> பதிவு எண்: ______________ <br><br> நாள் : ______________ |

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## சான்றிதழ்க் கல்வி

## **BA00** மேல்நிலை

### எழுத்துத் தேர்வு - மார்ச் - சூன் 2015

நேரம்: 1.30 மணி மதிப்பெண் : 50
Time : 1.30 hrs. Total Marks : 50

பகுதி - 1

**I.** **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
Read the following text and answer the questions given below in a single line.
**(5x1=5)**

திருக்குறள் தமிழர்களின் மறை என்றும், உலகப் பொதுமறை என்றும் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. இந்நூலின் கருத்துகள் மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்பதால் இதை ‘உலகப் பொதுமறை’ என்று சொல்வது பொருத்தமாகக் காணப்படுகிறது.

திரு + குறள் = திருக்குறள். திரு என்னும் சொல் பெருமை, மேன்மை என்னும் பல பொருள்களை உணர்த்தும். குறள் என்பது இரண்டு அடிகளைக் கொண்ட குறள் வெண்பாவைக் குறிக்கும். இந்நூல் குறள் வெண்பாவில் எழுதப்பட்டதால் ‘திருக்குறள்’ என்ற பெயரைப் பெற்றது.

திருக்குறள் மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பவை ஆகும். திருக்குறளில் மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்குப் பத்துப் பாக்கள் என மொத்தம் 1330 பாக்கள் இருக்கின்றன.

**வினாக்கள் :**

1. உலகப் பொதுமறை என்று சிறப்பாகச் சொல்லப்படும் நூல் எது?

______________________________________________

2. ‘திரு’ என்னும் சொல் உணர்த்தும் பல பொருள்கள் யாவை?

______________________________________________

3. திருக்குறள் எந்தப் பாவில் எழுதப்பட்டது?

______________________________________________

4. திருக்குறள் எத்தனை பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

______________________________________________

5. திருக்குறளில் மொத்தம் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

______________________________________________

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டு முரசே! – வாழ்வில்
கட்டுத் தொலைந்தது என்று
கொட்டு முரசே!

இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லிக்
கொட்டு முரசே! – வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்தது என்று
கொட்டு முரசே!

வினாக்கள்

1. எல்லார்க்கும் விளைந்தது என்று கவிஞர் குறிப்பிடும் செல்வங்கள் எத்தனை?

2. வாழ்வில் எது தொலைந்தது என்று கவிஞர் முரசு கொட்டுகிறார்?

3. பிணி என்று கவிஞர் எதனைச் சொல்கின்றார்?

4. எல்லார்க்கும் வேண்டிய நலமாகச் சொல்லப்படுவது எது?

5. மக்கள் வாழ்வில் இதுவரை இருந்துவந்த எது தீர்ந்தது என்று கவிஞர் கூறுகிறார்?

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**
Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. இனிப்பு

2. மழை

3. அம்மா

4. பாட்டு

5. அழகு

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. தமிழ் இலக்கியத்தில் வாழ்த்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. இளம்வயதில் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்புவதால் கதிர்வேலனுக்கு என்ன தீமை ஏற்படும் என்று ஆசிரியர் கூறினார்?
3. கரை ஓரத்தில் கடலில் சிறு படகு மிதப்பதைக் கல்கி எப்படி வருணனை செய்கிறார்?
4. தொடங்கிய செயலைச் செய்து முடிக்க எண்ணுபவர்கள் எவற்றைப் பொருட்டாகக் கருத மாட்டார்கள்?
5. ‘நெல்லிக்கனியை நீயே உண்டிருக்கலாமே’ என்று கூறிய ஔவையாரிடம் அதியமான் என்ன சொன்னான்?
6. அதிசூரனை ஏனாதிநாதர் கொல்லாமைக்கு உரிய காரணம் யாது?
7. கல்லூரியில் படிக்கச் சென்னைக்கு வந்த எழிலுக்கு அவனுடைய அப்பா கூறிய அறிவுரை யாது?
8. வாழ்வில் மறைந்து போனவையாகப் பாரதிதாசன் கூறுவன யாவை?
9. “பொய் பேசு!”, “பொறாமை கொள்!” – இந்த இரு ஏவல் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.
10. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**V** **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**
Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. வெளியூரில் இருக்கும் உங்கள் அப்பா, உங்கள் பிறந்த நாளுக்குப் பரிசும் வாழ்த்தும் அனுப்பியதற்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் எழுதுக.
2. அண்மையில் நீங்கள் சென்று வந்த சுற்றுலாவைப் பற்றி வெளியூரில் இருக்கும் உங்கள் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. நீங்கள் படிக்க விரும்பும் சில புத்தகங்களை வாங்கி வருமாறு வேண்டி வெளியூர் சென்றிருக்கும் உங்கள் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

*****